செ.வெ.எண். 14/ஜூன் செய்தி வெளியீடு நாள்: 06.06.2016





தருமபுரி மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.06.2016) மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், சாலையில் உள்ள மரங்களை அகற்றி சாலைகளை அகலப்படுத்தி தர கோருதல், வேலைவாய்ப்பு, கல்வியில் படிப்பதற்கு உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 409 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் உள்ள பள்ளி வாசல்களில் எதிர்வரும் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு 07.06.2016 முதல் இசுலாமிய மக்களுக்கு கஞ்சி வழங்குவதற்காக அரிசி மொத்த அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி முதற்கட்டமாக இதுவரை பெறப்பட்ட மனுக்களின் பேரில் 12 பள்ளி வாசல்களுக்கு ரம்ஜான் நோன்புக் கஞ்சி தயார் செய்து வழங்குவதற்காக 22 டன் அரிசிக்கான ஆணையினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்களால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாளில் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. மாலதி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பிச்சைராமன், தனி துணை ஆட்சியர்கள் செல்வி வள்ளி

(ச.பா.தி), (நில அளவை) திருமதி. பாப்பாத்தி, தனி துணை ஆட்சியர் (சிறப்புத்திட்டங்கள்) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்<br>
தருமபுரி.